வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007–08ஆம் ஆண்டுக்கு ஐந்து நிறுவனங்களும் மற்றும் 2008–09ம் ஆண்டுக்கு நான்கு நிறுவனங்களும் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.5 லட்சம் பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்குதல்

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 18 நாள்: 2.3.2009.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி2) துறை, நாள் 2.7.2007.
2. அரசு கடித எண்.1779/மாஅதி1/2009–1 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 29.1.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.40304/07/பரா அ1.1, நாள் 19.2.2009.

* * * * *

**ஆணை:**

வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டு பணிகளில் ஈடுவடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 2007–08 ஆண்டுமுதல் விருது ஏற்படுத்தி ஆண்டுதோறும் 5 சிறந்த நிறுவனங்களுக்கு தலா ரூ.5 லட்சம் பரிசுத்தொகையும், நற்சான்றிதழும் வழங்கவும் இவ்விருது வழங்குவதற்கு தேர்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கான தகுதிகள், தேர்வுமுறை மற்றும் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் குறித்தும் படிக்கப்பட்டவை 1 மற்றும் 2ல் உள்ள அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்ட தகுதிகள், மற்றும் தேர்வுமுறை குறித்த கூறுகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும், நிறுவனங்களிடமிருந்து நேரிடையாகவும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு சுருக்கத்தேர்வு (shortlist) செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தல ஆய்வு மற்றும் குறிப்புரையினையும் பெற்று, பரிசீலனை செய்து அதனடிப்படையில் 2007–08ம் ஆண்டுக்கான 10 நிறுவனங்களையும், 2008–09ம் ஆண்டுக்கான 10 நிறுவனங்களையும் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து அதிலிருந்து 2007–08ம் ஆண்டுக்கான 5 நிறுவனங்களையும் மற்றும் 2008–09ம் ஆண்டுக்கான 5 நிறுவனங்களையும் அரசு இறுதியாக தேர்வு செய்ய வேண்டி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் படிக்கப்பட்டவை 3ல் உள்ள தனது கடிதத்தில் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்தது. அதன்படி 2007–08ஆம் ஆண்டுக்கு கீழ்கண்ட ஐந்து நிறுவனங்களையும், 2008–09ஆம் ஆண்டுக்கு கீழ்கண்ட நான்கு நிறுவனங்களையும் தேர்வு செய்து, அந்நிறுவனங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையும் நற்சான்றிதழும் வழங்க அரசு ஆணையிடுகிறது.

**<u>2007–08 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்.</u>**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு காகிதம் மற்றும் செய்தித் தாள் நிறுவனம்,<br>காகிதபுரம் ,<br>கரூர் மாவட்டம். |
| 2. | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம்,<br>காரைக்கால்,<br>பாண்டிச்சேரி. |
| 3. | ஸ்ரீநிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை,<br>டி.வி.எஸ். மோட்டார் குழுமம்,<br>சென்னை |
| 4. | செயின்ட் கோபெயன் கிளாஸ் இந்தியா லிமிடெட்,<br>ஸ்ரீபெரும்புதூர்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
| 5. | சக்தி மசாலா தனியார் நிறுவனம்,<br>மாமரத்துப்பாளையம்,<br>ஈரோடு மாவட்டம். |

**<u>2008–09ம் ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்.</u>**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1. | சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட்,<br>மணலி,<br>சென்னை. |
| 2. | ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்,<br>சேலம் உருக்கு நிறுவனம்,<br>சேலம் மாவட்டம். |
| 3. | ஆர்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மாசூட்டிக்கல்ஸ் லிமிடெட்,<br>நுங்கம்பாக்கம்,<br>சென்னை. |
| 4. | ஸ்ரீஇராமலிங்கா மில்ஸ் லிமிடெட்,<br>அருப்புக்கோட்டை,<br>விருதுநகர் மாவட்டம். |

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.